# singapore stories

## Pathways & Detours in Art

**எதனைப் பற்றியது இது?**

இந்த இடம் ஓவியர் அமண்டா ஹெங் (Amanda Heng) மற்றும் எங்கள் வடிவமைப்பு மற்றும் புத்தாக்கக் கூட்டாளர்களால் கற்பனை செய்யப்பட்டது. சிங்கப்பூரின் பொதுக்குடியிருப்புகளில் உள்ள சமூகக்கூடலுக்கான இடமான வெற்றுத் தரைத்தளத்தால் ஈர்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட இந்த இடம், தொழில்நுட்பமும் கலையும் இணைந்து நாம் சேரும் வழிகளை எவ்வாறு மாற்றுகின்றன என்பதை ஆராய்கிறது.

அமண்டாவிடமோ அல்லது அவரது செயற்கை நுண்ணறிவு - இரட்டையரான, ஓய்வுபெற்ற சிங்கேர்ளிடமோ (Singirl), சிங்கப்பூரில் அவரது ஓவியச் செய்முறை பற்றியும் ஓவியம் பற்றியும், மனிதர்களின் மின்னிலக்க "இரட்டையர்கள்" அடையாளம் பற்றிய நமது கருத்துகளை எவ்வாறு எதிர்க்கிறார்கள் அல்லது வலுப்படுத்துகிறார்கள் என்பது பற்றியும், தொழில்நுட்பம் இறுதியில் உரையாடல்களை எளிதாக்குகிறதா அல்லது தடுக்கிறதா என்பது பற்றியும் உரையாடவும்.

நீங்கள் அந்த இடத்தில் தங்கியிருக்கும்போது உங்கள் சொந்தக் கேள்விகளையும் பதில்களையும் உருவாக்கி, ஓவியருடன் சேர்ந்து உரையாடத் தயங்காதீர்கள்!

நாம் மேலும் கலந்துரையாடுவோம்!

நாம் மேலும் கலந்துரையாடுவோம் (2025) மற்றும் ஓய்வுபெற்ற சிங்கேர்ள் (2025)

அமண்டா ஹெங்

(பிறப்பு. 1951, சிங்கப்பூர்)

சிங்கப்பூர்க் கதைகள் அமைப்பால் படைக்கப் பணிக்கப்பட்டது

சிங்கப்பூர்க் கதைகளுக்கு வெளியுறை மூட்டல்: 'ஓவியத்திலுள்ள பாதைகள் மற்றும் மாற்றுப்பாதைகள்' என்ற ஓவியர் அமண்டா ஹெங்கின் இவ்விரு புதிய பணிப்பேற்புப் படைப்புகளும், முப்பரிமாண ஒளிப்படவியல் காட்சி (holographic display) மற்றும் செயற்கை நுண்ணறிவுத் (AI) தொழில்நுட்பங்கள் மூலம் ஹெங்கின் தொழில் வாழ்க்கையின் முக்கியப் படைப்புகளுக்குப் பதிலளிக்கின்றன. செயற்கை நுண்ணறிவு மனிதனின் (AI human) உருவாக்குநர்களான Pantheon Lab மற்றும் சமூக-வடிவமைப்புப் படைப்பகமான Lekker Architects உடன் இணைந்து உருவாக்கப்பட்ட இந்நிறுவல், ஒன்றுகூடுதல், பிரதிபலிப்பு மற்றும் உரையாடலுக்கான இடமாகும். அருகிலுள்ள இடம், நிகழ்த்துகலை, பெண்ணியம் மற்றும் அடையாளம் ஆகியவற்றில் ஹெங்கிற்கு இருக்கும் நீண்டகால ஈடுபாட்டைப் பற்றிச் சிந்திக்க இடமளிக்கிறது.

முதல் படைப்பான 'நாம் மேலும் கலந்துரையாடுவோம்' நேரடித் தொலைத்தோற்ற (live telepresence) நிகழ்த்துகலைகளின் தொடராகும். இது ஹெங்கின் உருவாக்கப் படைப்பான 'நாம் கலந்துரையாடுவோம்' (1996) என்பதிலிருந்து எடுக்கப்பட்டது, இஃது இப்போது சிங்கப்பூரின் தேசியச் சேகரிப்பில் உள்ளது. ஓவியர் ஒரு முப்பரிமான ஒளிப்படவியல் தோற்றமாகத் தோன்றுகிறார், சிங்கப்பூரின் கலை வரலாறு மற்றும் அடையாளம் பற்றிய முறைத்தொடர் (episodic) உரையாடல்களில் பார்வையாளர்களை ஈடுபடுத்துகிறார், தேசியக் கொள்கைக்குப் பதிலாக மக்கள் எவ்வாறு கூட்டு அடையாளங்களை உருவாக்குகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

இரண்டாவது படைப்பான 'ஓய்வுபெற்ற சிங்கேர்ளில்', ஹெங்கின் சார்பாக 2030 வரை ஒரு செயற்கை நுண்ணறிவு அவதாரம் கலையை நிகழ்த்தும். இந்த அவதாரம் ஓவியரின் காப்பகம் மற்றும் தரவை அடிப்படையாகக் கொண்டது, அஃது உரையாடல்கள் மூலம் மேலும் மேம்பாடடையும். இந்த இடத்தில் நடைபெறும் கலந்துரையாடல்களில்

பொதுமக்கள் அளிக்கும் பங்களிப்புகள் குறிப்பிட்ட நேரத்தில் செயற்கை நுண்ணறிவுக்குத் தகவல்களைத் தெரிவிக்கும். ‘ஓய்வுபெற்ற சிங்கேர்ள்’, மின்னிலக்க மனிதர்களை மறுகற்பனை செய்யும் அவசரப் பெண்ணியவாதியாகவும் இருக்கிறார், அவர்கள் பெரும்பாலும் வயதற்ற கூட்டங்களாகவும் பெண்மையின் இலட்சியங்களாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள். இக்கலைப்படைப்பு ஆணாதிக்கப் பார்வையை எதிர்க்கிறது மற்றும் பெண்கள் மெய்ந்நிகர் வடிகட்டிகளிலிருந்து (virtual filters) தங்கள் இயல்பான பிம்பத்தை மீட்டெடுக்க ஊக்குவிக்கிறது.

இக்கலைப்படைப்புகள் நமது மின்னலக்க எதிர்காலங்களையும், கலைப்படைப்பு மற்றும் அதன் காப்பகங்களின் எதிர்காலத்தையும் தீவிரமாகக் கருதுகின்றன. "நேரடி நிகழ்த்துகலை" எவ்வளவு காலம் நிலைத்திருக்க முடியும்? அஃது ஓவியர் மற்றும் அதன் ஒத்துழைப்பாளர்களுக்கு அப்பால் வாழ்கிறதா? ஓர் ஓவியரின் காப்பகம், கடந்த காலத்தைக் குறிப்பதை விட அதிகமாக இருக்க முடியுமா? அது புதிய வாழ்க்கை முறைகளை உருவாக்க முடியுமா? ‘நாம் மேலும் கலந்துரையாடுவோம்’ மற்றும் ‘ஓய்வுபெற்ற சிங்கேர்ள்’ ஆகியவை பொதுமக்களுடன் வளரும் நிறுவல்களை உருவாக்கி வருகின்றன. இரண்டு படைப்புகளும் 2030 வரை அவ்வப்போது நிகழ்த்தப்படும். எந்த இரண்டு சந்திப்புகளும் ஒரே மாதிரியாக இரா.

**சூழலினுள் கலந்துரையாடுவோம் (1996)**

1996 ஆம் ஆண்டு தி 'சப்ஸ்டேஷனில்' முதன்முதலில் படைக்கப்பட்ட 'நாம் கலந்துரையாடுவோம்' என்பது ஒரு நிறுவல் மற்றும் நிகழ்த்துகலை சார்ந்த கலைப்படைப்பாகும், இதில் அமண்டா ஹெங் தனது தாயார் சிங்கப்பூரின் பொதுக்குடியிருப்புப் பேட்டைகளின் வெற்றுத் தரைத்தளங்களில் நண்பர்களுடன் கூடிப் பேசிய கூட்டங்களை மீண்டும் உருவாக்குகிறார். இந்த, முறைசாரா, அன்றாடச் சந்திப்புகளைக் கண்முன் கொண்டுவருவதற்காக அவர் மேசைகள், நாற்காலிகள் மற்றும் தேநீர் அல்லது பீன்ஸ் முளைகள் போன்ற வீட்டுப் பொருள்களை ஒன்றாகக் கொண்டு வருகிறார். பீன்ஸ் முளைகளிலிருந்து வேர்களைப் பறிப்பது போன்ற பகிர்ந்துசெய்யும் பணிகளின் இடையே சாதாரண உரையாடல்களில் வேரூன்றிய, நாம் 'கலந்துரையாடுவோம்' சமூகப் பரிமாற்றம் மற்றும் சமூகப் பிணைப்பின் தருணங்களை உருவாக்குகிறது.

பல ஆண்டுகளாகக், கலைக்கும் அன்றாட வாழ்க்கைக்கும் இடையிலான வளர்ந்து வரும் உறவை ஆராய ஹெங் உரையாடல் கருப்பொருள்களை உருவாக்கியுள்ளார். ஹெங்கின் காப்பகத்திலிருந்து இங்கு மறுபடைப்பு செய்யப்பட்ட பிரதிகளில், 1996 ஆம் ஆண்டில் 'தி சப்ஸ்டேஷனில்' நடைபெற்ற 'அக்டோபர்' கண்காட்சியின் ஒரு பகுதியாக, 'தி நெஸஸரி ஸ்டேஜ்' அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சித் தொடக்கவிழாப் படைப்பும், 1998 ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் உள்ள பாண்டுங் தொழில்நுட்ப நிறுவனத்தில் (ITB) நடைபெற்ற ‘நகரமயமாக்கல்’ என்ற வட்டார நிகழ்ச்சியின் ஒரு பகுதியும், 1999 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஃபுகுவோகா ஆசிய மூன்றாண்டுமுறை ஓவியக் கண்காட்சி மற்றும் 2000 ஆம் ஆண்டில் சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தில் நடந்த 'விருந்து! கலையில் உணவு!' கண்காட்சியில் இடம்பெற்ற படைப்புகளும் அடங்கும்.

**ஓவியர் பற்றிய அறிமுகம்**

அமண்டா ஹெங் (பிறப்பு 1951, சிங்கப்பூர்) 1980களின் பிற்பகுதியிலிருந்து முழுநேர ஓவியப் செய்முறையாளராக இருந்து வருகிறார். ஹெங், சிங்கப்பூரில் இரண்டு ஓவியர் சார்ந்த முன்முயற்சிகளை நிறுவுவதில் ஈடுபட்டார், 1989-இல் 'ஓவியர் கிராமம் (தி ஆர்ட்டிஸ்ட்ஸ் வில்லேஜ்)' மற்றும் 1999 இல் WITA (கலைகளில் பெண்கள்) ஆகியவை இதில் அடங்கும். அவரது படைப்புகள் வரலாறு, நினைவு மற்றும் மனித உறவுகளைப் பற்றிப் பேசுகின்றன. ஹெங் 'நேரடிக் கலை' என்ற நிகழ்த்துகலை சார்ந்த மற்றும் செயல்முறை சார்ந்த கலைப் படைப்பாளர் ஆவார், இதில் அவர், பகிரப்பட்ட இடம், பரிமாற்றம் மற்றும் அனுபவங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாளராக இருக்கிறார். அவரது கலைப்படைப்புகள் கலைக்கும் இயல்புத்தன்மைக்கும் இடையிலான கோடுகளை மங்கலாக்குகின்றன, மேலும் அவை பெரும்பாலும் வெவ்வேறு பின்னணிகளைச் சேர்ந்த மக்களின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்படுகின்றன, இதனால் கலைக்கான அணுகல் மற்றும் போற்றுதலை மக்கட்மயப்படுத்துகின்றன.. ஹெங்கிற்கு 2010 ஆம் ஆண்டு காட்சிக் கலைகளுக்கான கலாச்சாரப் பதக்கம் வழங்கப்பட்டது, 2020 ஆம் ஆண்டு 12வது பெனஸ்ஸி பரிசு வழங்கப்பட்டது, மேலும் 2023 ஆம் ஆண்டு சிங்கப்பூர் பெண்களுக்கான ‘துறைப் புகழாளர் கூடத்தில்’ (Hall of Fame) சேர்க்கப்பட்டார்.

| |
|---|
| அமண்டா ஹெங்கின் தாயார் மற்றும் அவரது நண்பர்கள் ஒரு பொதுக்குடியிருப்பின் வெற்றுத் தரைத்தளத்தில் சந்திப்பதைப் பற்றிய குறிப்புகளைக் கொண்ட புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன, மேலும் படைப்பை விவரிக்கும் ஓவியரின் அறிக்கையும் இதில் உள்ளது. இக்காட்சிப்படுத்தல் ஹெங்கின் தொடக்கக்கால 'நாம் கலந்துரையாடுவோம்' நிறுவல்களால் ஈர்க்கப்பட்டது. 1990கள் மற்றும் 2000களில் இப்பொருள்களைக் கொண்டு 'நாம் கலந்துரையாடுவோம்' படைப்பை அவர் வழங்கினார், குறிப்பாக 1996-இல் 'தி சப்ஸ்டேஷனில்' அசல் நிறுவலிலும், பின்னர் 1999-இல் ஃபுகுவோகா ஆசியக் கலை மூன்றாண்டுமுறைக் கண்காட்சியிலும் அப்படைப்பின் நிறுவலில் இப்பொருள்கள் பயன்படுத்தப்பட்டன.<br><br>அமண்டா ஹெங்கின் கனிவான அனுமதியுடன் சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத்தின் நூலகம் & காப்பகத்தால் மின்னிலக்க வடிவமாக்கப்பட்டது |
| இப்புகைப்படங்கள், ஃபுகுவோகா ஆசியக் கலை அரும்பொருளகத்தின் திறப்பு விழாவை நினைவுகூரும் வகையில், ஃபுகுவோகா கலை அரும்பொருளகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 5வது ஆசியக் கலைக் கண்காட்சியான, 1வது ஃபுகுவோகா ஆசியக் கலை மூன்றாண்டுமுறைக் கண்காட்சியில் அமண்டா ஹெங் 'நாம் கலந்துரையாடுவோம்' படைப்பை நிறுவியதை ஆவணப்படுத்துகின்றன. விழாக்களின் ஒரு பகுதியாகவும், மூன்றாண்டுமுறைக் கண்காட்சியின் "தொடர்பாடல்: நம்பிக்கைக்கான வழிகள்" என்ற கருப்பொருள் தொடர்பாக, 25 ஓவியர்கள் மற்றும் ஓவியர் கூட்டுக்குழுக்கள் ஃபுகுவோகாவில் பல வாரங்கள் தங்க அழைக்கப்பட்டனர். ஓவியர்கள் தங்கள் படைப்புகளை படைத்தனர், பட்டறைகள் மற்றும் நிகழ்ச்சிகளை நடத்தினர். அத்துடன் அவர்களின் நடைமுறைகள் குறித்து உரைகளை வழங்கினர். இந்த வாழ்விடத்தின் ஒரு பகுதியாக, ஒரு முறை கடைத்தொகுதியிலும், மற்றொரு முறை ஃபுகுவோகா ஆசியக் கலை அரும்பொருளகத்திலும் என 'நாம் கலந்துரையாடுவோம்' இரண்டு முறை படைக்கப்பட்டது, அரும்பொருளகத்தில் ஹெங் வழங்கிய 'நாம் கலந்துரையாடுவோம்' நிகழ்ச்சி இப்புகைப்படங்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. ஹெங்கின் முக்கிய ஆர்வங்களில் ஒன்றான "ஒரு காட்சியகத்தில் ஓர் உரையாடல் மூலை" என்ற அடிப்படையை மீளுருவாக்குவது என்பது, உறவுகளை உருவாக்குவதற்கும் நிலைநிறுத்துவதற்கும் அவசியமான வழிமுறையாகத் தொடர்பாடல்களை அறிமுகப்படுத்துவதாகும்.<br><br>1999 மே 14 முதல் 21 வரை நடைபெற்ற 1வது ஃபுகுவோகா ஆசியக் கலை கண்காட்சியின் ஒரு பகுதியாக ஃபுகுவோகா ஆசியக் கலை அரும்பொருளகத்தில் 'நாம் கலந்துரையாடுவோம்' |

| |
|---|
| படைக்கப்பட்டதன் தொடர்பான கண்காட்சி ஆவணங்களின் மறுஉருவாக்கம்.<br><br>அமண்டா ஹெங்கின் கனிவான அனுமதியுடன் சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத்தின் நூலகம் & காப்பகத்தால் மின்னிலக்க வடிவமாக்கப்பட்டது |
| 1998 பிப்ரவரி 14 முதல் மார்ச் 2 வரை பாண்டுங் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெற்ற வட்டாரக் கலை நிகழ்வான 'நகரமயமாக்கல்' என்பதன் ஒரு பகுதியாக 'நாம் கலந்துரையாடுவோம்' படைக்கப்பட்டதன் தொடர்பான கண்காட்சி ஆவணங்களின் மறுஉருவாக்கம்.<br><br>அமண்டா ஹெங்கின் கனிவான அனுமதியுடன் சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத்தின் நூலகம் & காப்பகத்தால் மின்னிலக்க வடிவமாக்கப்பட்டது |
| சிங்கப்பூர் கலை அரும்பொருளகம், பிராஸ் பாசா சாலையில் உள்ள முன்னாள் செயிண்ட் ஜோசப் நிறுவனம் (SJI) கட்டடத்தில் அமைந்திருந்தபோது, 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 முதல் ஜூலை 9 வரை அங்கு நடைபெற்ற குழுக் கண்காட்சியான 'விருந்து! கலையில் உணவு!' என்பதன் கண்காட்சி ஆவணங்களின் மறுஉருவாக்கம்.<br><br>அமண்டா ஹெங்கின் கனிவான அனுமதியுடன் சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத்தின் நூலகம் & காப்பகத்தால் மின்னிலக்க வடிவமாக்கப்பட்டது |
| 1996 செப்டம்பர் 25 முதல் அக்டோபர் 2 வரை சிங்கப்பூரின் 'தி சப்ஸ்டேஷனில்' நடைபெற்ற 'அக்டோபர்' கண்காட்சியின் கண்காட்சி ஆவணங்களின் மறுஉருவாக்கம்.<br><br>அமண்டா ஹெங்கின் கனிவான அனுமதியுடன் சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத்தின் நூலகம் & காப்பகத்தால் மின்னிலக்க வடிவமாக்கப்பட்டது |
| இக்கண்ணாடிப் பாத்திரம் அமண்டா ஹெங்கின் ஓவியர் காப்பகத்திலிருந்து பெற்ற பொருள்களைக் கொண்டுள்ளது, இதனை உச்ச நீதிமன்றப் பிரிவின் மூன்றாம் மாடியிலுள்ள சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத்தின் நூலகம் & காப்பகத்தில் காணலாம்.<br><br>இத்தொகுப்பு, 1996 ஆம் ஆண்டு 'தி நெஸஸரி ஸ்டேஜ்' அமைப்பால் 'தி சப்ஸ்டேஷனில்' படைக்கப்பட்ட 'நாம் கலந்துரையாடுவோம்' படைப்பின் முதல் மறுசெய்கையைப் பற்றித் தெரிவித்த உறவுகள் மற்றும் ஆராய்ச்சிச் செயல்முறை குறித்த நெருக்கமான, திரைக்குப் பின்னால் உள்ள பார்வையை வழங்குகிறது. நாடக ஆசிரியர் ஹரேஷ் சர்மா (Haresh Sharma) 'தி நெஸஸரி ஸ்டேஜ்' அமைப்பின் ஆகியோரிடமிருந்து ஓவியருக்கு அனுப்பப்பட்ட அஞ்சல் அட்டை; 'அக்டோபர்' கண்காட்சியின் ஒரு பகுதியாக இருந்த சமூக நிகழ்வுகள், நாடக நிகழ்ச்சிகள் மற்றும் கலை நிகழ்வுகளின் பன்முகத்தன்மையை விளக்கும் கண்காட்சித் துண்டுப்பிரசுரங்கள்; மற்றும் 1996 இல் 'நாம் கலந்துரையாடுவோம்' படைப்பை உருவாக்குவதற்கான தனது ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக |

சிங்கப்பூரின் செலேட்டரில் உள்ள ஒரு பீன் (bean) தொழிற்சாலையில் ஓவியர் எடுத்த புகைப்படங்கள் ஆகியவை இதில் அடங்கும்.

1996 ஆம் ஆண்டு, செப்டம்பர் 25 முதல் அக்டோபர் 2 வரை, சிங்கப்பூரின் 'தி சப்ஸ்டேஷனில்' நடைபெற்ற 'அக்டோபர்' கண்காட்சியின் பிரதியின் மறுஉருவாக்கம் மற்றும் 'நாம் கலந்துரையாடுவோம்' படைப்பை விவரிக்கும் ஓவியரின் அறிக்கைகள்.

அமண்டா ஹெங்கின் கனிவான அனுமதியுடன் சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத்தின் நூலகம் & காப்பகத்தால் மின்னிலக்க வடிவமாக்கப்பட்டது